**ஒதுக்கீட்டுத் தலைப்பு- 267**

**முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2011**

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

i. மாவட்ட மற்றும் பிரதேசங்களில் சிறந்த வழியில் பிரசைகள் பட்டயத்தை முழுமையாக அமுலாக்கல்.

ii. மாவட்டத்தில் நிர்வாகம் மற்றும் அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து தலைமை தாங்குதல்

iii. மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் சேவையில் செயற்றிறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு சிறந்த வழியில் அரசாங்க கொள்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளை அமுலாக்கல்.

iv. வெளிப்படையான பக்கசார்பற்ற கணக்களி பொறுப்புடைய பொது மக்கள் சேவையை உருவாக்குவதற்கு.

v. உத்தியோகத்தரின் இயலளவை வலுப்படுத்தல்.

vi. மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நிதி முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுதல்

vii. ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான மாவட்ட மற்றும் பிரதேச பொது நிர்வாக முறைமையை மேம்படுத்தல்.

viii. மாவட்டத்தில் பொது மக்களின் தேவைகளை திருப்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு.

ix. அரசாங்க சேவைகளின் செயற்றிறன் மற்றும் தரத்தை முன்னேற்றுவதற்கு நவீன தகவல் தொழில்நுட்பத்துடன் முழு சேவைகளையும் அறிமுகப்படுத்தல்.

x. பிரதான நிதிக் குறிகாட்டிகளை அளவிடுவதற்கு.

xi. அமைச்சுக்களால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு.

xii. மாவட்ட மற்றும் பிரதேசங்களில் அரச விழாக்களை நடாத்துதல்.

xiii. மாவட்ட மட்டத்தில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்வதற்கு.

xiv. இடர் முகாமைத்துவம் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு முன் திட்டமிடல் நடவடிக்கைகளை தயாரிப்பதற்கு.

xv. வளங்களின் முறையான பாயன்பாட்டினை உறுதிப்படுத்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மரிதிமேபற்று
(ஆ) ஒட்டிசுட்டான்
(இ) மாந்தை கிழக்கு
(ஈ) துணுக்காய்
(உ) புதுக்குடியிருப்பு

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 மே 14 ஆந் திகதி முல்லத்தீவு மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் காணப்பட்டன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச்

சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 136,125,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 133,507,483 பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 2,617,517 அல்லது 1.92 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவின வகுதி | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய ஒதுக்கீடு | பயன்பாடு | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 71,550,000 | 75,050,000 | 73,378,694 | 1,671,306 | 2.23 |
| மூலதனம் | 61,075,000 | 61,075,000 | 60,128,789 | 946,211 | 1.55 |
| மொத்தம் | 132,625,000 | 136,125,000 | 133,507,483 | 2,617,517 | 1.92 |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நோக்கங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் கீழே காட்டப்பட்டவாறு ரூபா 15,534,286 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான ஏற்பாட்டின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | தேறிய ஏற்பாடு | செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உன்னவாறான சேமிப்புக்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் அலுவல்கள் அமைச்சு | 4,122,490 | 3,045,994 | 1,076,496 |
| கமத்தொழில் அமைச்சு | 106,000 | 53,428 | 52,572 |
| தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பட்டு அமைச்சு | 17,030 | 17,030 | - |
| கமநல சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சு | 102,000 | - | 102,000 |
| சுற்றாடல் அமைச்சு | 535,000 | 527,400 | 7,600 |
| பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 1,522,000 | 1,423,634 | 98366 |
| பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 1,788,429 | 1,784,768 | 3,661 |
| காணி மற்றும் காணிப்பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 731,263 | 685,412 | 45,851 |
| தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | 4,635,604 | 2,272,663 | 2,362,941 |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 304,470 | 295,233 | 9,237 |
| பதிவாளர் நாயக் திணைக்களம் | 1,670,000 | 1,528,454 | 141,546 |
| மொத்தம் | **15,534,286** | **11,634,016** | **3,900,270** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

26701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10,676,000 | 10,645,770 | 2,800,000 | 7,606,179 | 38,000,000 | 26,388,083 |

## 2.3 பொது வைப்பு மற்றும் கட்டுநிதிக் கணக்கு

(அ) கட்டுநிதிக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் கட்டுநிதி வரவு மீதி ரூபா 2,333,661 ஆகும்.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 17,249,353 ஆனதுடன் அவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0/0/43/0 | 17,249,353 |

## 2.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

மாவட்ட செயலகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (எ) வரையான பொது அவதானிப்புக்களையும் 2.5 இலிருந்து 2.9 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

(i) மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுச் செய்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை |
| ஆ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | |
| இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் இல. 214 | |
| ஈ) | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | |

(ii) ரூபா 36,639 இற்கான பற்றுச்சீட்டுக்கள், ரூபா 882,516 இற்கான பொலிஸ் அறிக்கை மற்றும் ரூபா 2,333,661 இற்கான நட்டங்களின் விபரங்கள் மற்றும் விரிவான பட்டோலை போன்றவாறான சான்றுகள் இன்மை காரணமாக மாவட்ட செயலகத்தின் ரூபா 3,252,816 மொத்தமான பதினொரு கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருத்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

(ஆ) பாதீட்டு முரண்

1-1-0-1404 செலவு விடயங்களின் கீழ் செய்யப்பட்ட ரூபா 50,000 தொகையான தேறிய ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின்படி, 2010 ஆம் ஆண்டு மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளுக்கு வரிசை அமைச்சிற்கு மாவட்ட செயலாளர்கள் சமர்ப்பிக்க வேண்டிய செயற்பாட்டுத் திட்டம் 2011 திசெம்பர் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 31 ஆந் திகதிய 128 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி, 2011 திசெம்பர் 31 வரை கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது வைப்புக் கணக்கு

(i) 2 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரூபா 2,344,090 தொகையான கோரப்படாத வைப்புக்கள் மீது நிதிப்பிரமாணம் 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆனந்தபுரத்தில் மகளீர் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவரிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 492,419 தொகையான வைப்புக்கள் 2012 மே 08 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கிணக்கக் கூற்று

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கிணக்கக் கூற்றின்படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 296,963 ஆனதுடன் அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளின் அறவீடு மீதான தொடர்நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) வருடாந்த கணப்பீட்டுச் சபையினனை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டு சம்பந்தமான வருடாந்த கணப்பீட்டுச் சபை அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட மிகைகள் மற்றும் குறைவுகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய சிபார்சுகள் மீது நிதிப்பிரமாண இல 756 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக நிதிப்பிரமாண இல. 756 இன்படி 102 கிராம சேவகர் அலுவலகங்கள் தொடர்பில் கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பொறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணங்கள் | ரூபா | |
| | நிதிப்பிரமாணம் 103 (பீ) | 202,618 | விபத்து பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் | | |
| (i) | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய திகதியில் சமர்ப்பிக்கப் |

| | | |
|---|---|---|
| | | பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | 2011 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை |
| (iii) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| ( (iv) ஆ ) | பொதுத் திறைசேரி சுற்றறிக்கை - 1999 ஏப்ரல் மாதத்தின் 1/99 ஆம் இலக்கம் | காசினை கையாளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைவைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |

வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவிலிருந்து ரூபா 182,091 தொகையான பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.7. நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு தெரிவுச் செவ்வை மற்றும் மாவட்ட செயலகத்தில் பேணப்பட்ட தகவல்கள் என்பவற்றில் ரூபா 882,516 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்பீடுகள் வெளிப்பட்டுள்ளன.

## 2.8. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | குறைவு |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | இல்லை | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 26 | 18 | 08 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 08 | 04 |
| | மொத்தம் | 46 | 31 | 15 |

## 2.9 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களால் எவ்வித உள்ளக கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

மாவட்ட செயலகம் மற்றும் நான்கு பிரதேச செயலகங்கள் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் கூட்டங்கள் எதனையும் நடாத்தியிருக்கவில்லை.